பக்கங்கள். ஆறு

Registered as a Newspaper

அன்பளிப்பு

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 தை 9 செவ்வாய்க்கிழமை (23-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 58

# 39 படையினருடன் ஹெலிக்கொப்டர் வடக்குவானில் காணாமற்போனது

## புலிகள் கடலில் வீழ்த்தியிருக்கலாம் என படை வட்டாரங்கள் ஊகம்

சாவகச்சேரி, ஜனவரி. 23

ஸ்ரீலங்கா விமானப் படையின் எம். ஐ. 17 ரக ஹெலிக்கொப்டர் ஒன்று நேற்று நண்பகல் 39 படையினருடன் வடபகுதி வானில் காணாமல் போனது.

விடுதலைப் புலிகள் இந்த ஹெலிக்கொப்டரை கடலில் சுட்டு வீழ்த்தியிருக்கலாம் என ஸ்ரீலங்கா படை வட்டாரங்கள் ஊகம் தெரிவித்துள்ளன.

ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட — துருப்புகள் காவியாகவும், தாக்குதல் கலமாகவும் பயன்படுத்தப்பட்ட — இந்தப் பாரிய ஹெலிக்கொப்டர் நேற்று நண்பகல் 11-59 மணியளவில் பலாலி முகாமிலிருந்து புறப்பட்டு, கடல் வழிப் பாதையூடாக வெற்றிலைக்கேணி நோக்கிச் சென்று கொண்டிருக்கையில், புறப்பட்டு சற்று நேரத்தில் திடீரென காணாமற் போனதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன.

மூன்று இராணுவ அதிகாரிகள், முப்பது இராணுவச் சிப்பாய்கள், இரு கடற்படைச் சிப்பாய்கள், இரு விமானப் படையினர், இரு ஹெலிக்கொப்டர் பைலட்டுகள் என 39 பேர் இந்த ஹெலிக்கொப்டரில் இருந்தனர்.

பலாலியிலிருந்து வெற்றிலைக்கேணி ஊடாக வவுனியாவுக்கு இந்த ஹெலிக்கொப்டர் செல்லவிருந்தது.

விடுதலைப் புலிகளின் தகவல் பரிமாற்றத்தை இடைமறித்துக் கேட்டதில் அவர்களே இந்த ஹெலிக்கொப்டரைச் சுட்டு வீழ்த்தினார்கள் என்பது தெரிய வந்ததாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர் என்று பி. பி. ஸி. குறிப்பிட்டது.

மேலும்—

ஹெலி பலாலியிலிருந்து புறப்பட்டுச் சென்ற சற்று நேரத்தில் திடீரென அது ராடர் திரையிலிருந்து காணா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலிகள், பீரங்கிப்படகுகள் வடமராட்சி கடலில் தேடுதல்

ஹெலிக்கொப்டர் காணாமல் போய் நான்கு மணி நேரத்தின் பின்னர்— வடக்கு கடல் பகுதியில் அந்த ஹெலிக்கொப்டரைத் தேடும் நடவடிக்கையை ஸ்ரீலங்கா கடற்படையினரும், விமானப் படையினரும் ஆரம்பித்தனர்.

விமானப் படையினரின் ஹெலிக்கொப்டர்களும், கடற்படையினரின் பீரங்கிப் படகுகளும் வடமராட்சிக் கடலில் தேடுதலை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மூன்று ஹெலிக்கொப்டர்கள் கடற் பிராந்தியத்தில் உயரப் பறந்து கொண்டிருந்ததையும்

காங்கேசன்துறைப் பக்கத்திலிருந்து வந்த கடற்படைப் பீரங்கிப் படகுகள் ஆழ்கடலில் அலைந்ததையும்—

காணக்கூடியதாக இருந்ததாக எமது செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(உ-15-80)

## புலிகள் வீழ்த்தியதாக இந்திய வானொலி தகவல்

புதுடில்லி, ஜன. 24

காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட ஹெலிக்கொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு விடுதலைப் புலிகள் உரிமை கோரியிருப்பதாக இந்திய வானொலி நேற்று நள்ளிரவு அறிவித்தது.

மறைவான இடத்திலிருந்து ஒலிபரப்பப்படும் புலிகளின் வானொலி இத்தகவலை வெளியிட்டதாகவும் இந்திய வானொலி கூறியது.

[உ-7]

## வடமராட்சிப் பகுதியை நோக்கி ஷெல் வீச்சு

### மக்கள் இடம்பெயர்வு

மந்திகை, ஜன. 23

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று இரவு 9.30 மணியளவில் வடமராட்சிப் பகுதிகளை நோக்கி அகோர ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பருத்தித்துறை முனை, தும்பளை கரையோரப் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

ஷெல் தாக்குதலை அடுத்து வடமராட்சிப் பகுதி மக்கள் பலர் தம் வீடுகளில் நிலைகொள்ள அஞ்சி ஆலயங்களிலும், மந்திகை ஆஸ்பத்திரியிலும் தஞ்சமடைந்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

இத் தாக்குதலினால் ஏற்பட்ட சேத விவரங்கள் இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை தெரியவரவில்லை.

(இ-13)

## சுன்னாகத்திலும் கந்தரோடையிலும் படையினர் மீது புலிகள் தாக்குதல்

சாவகச்சேரி, ஜன. 23

சுன்னாகத்திலும், கந்தரோடையிலும் ஸ்ரீலங்காப் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி உள்ளனர்.

சுன்னாகத்தில் இடம்பெற்ற தாக்குதல் நேற்று முன்தினம் மாலை 5.00 மணியளவில் இடம்பெற்றது.

கந்தரோடையில் நேற்றுக் காலை 6.30 மணி அளவில் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த இரு தாக்குதல்களின் போதும் படையினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வலிகாமத்தில் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருவதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# சிப்பாய்கள், ஊர்காவலர் உட்பட 5 பேர் மணலாற்றில் நேற்று பலி!

## அதிகாலை புலிகள் திடீர் தாக்குதல்

சாவகச்சேரி, ஜன. 23

மணலாறில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய பத்து நிமிட நேர அதிரடித் தாக்குதலில் மூன்று சிப்பாய்களும், இரண்டு ஊர்காவலர்களும் கொல்லப்பட்டனர். ஆறு சிப்பாய்களும், 3 ஊர்காவலர்களும் காயமடைந்தனர்.

மணலாறில் பராக்கிரமபுர இராணுவ முகாமில் இருந்து 700 மீற்றர் தொலைவில் உள்ள சிங்களக் குடியேற்றத்துக்கு பாதுகாப்புக்கென அமைக்கப்பட்டிருந்த காவலரண் ஒன்றின் மீதே அதிகாலை ஒரு மணியளவில் புலிகள் இத் தாக்குதலை நடத்தினர்.

இதன் போது இராணுவத்தினருக்கு உதவுவதற்கென பராக்கிரமபுர இராணுவ முகாமில் இருந்து மோட்டார் சைக்கிள்களில் வந்த விசேட அதிரடிப்படை [illegible] புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டன.

காவலரண் கைப்பற்றப்பட்டு ஒரு மணி நேரம் விடுதலைப்புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டது.

இத்தாக்குதலின் போது 40 மி. மீ. பிஸ்ரல் - 1, ஏ. கே. ரக துப்பாக்கி – 3, எஸ். எல். ஆர். ரக துப்பாக்கி - 1, ஷொட்கண் துப்பாக்கி – 2, 40 மி. மீ. ஷெல்கள் – 7, ஏ. கே. மகஸின் – 9, எஸ். எல். ஆர். மகஸின் - 1,

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சிங்கள குடியேற்றவாசிகள் பெருமளவு இடம்பெயர்வு

சாவகச்சேரி, ஜன. 23

பொலன்னறுவை மாவட்ட எல்லைக் கிராமங்களிலிருந்து சிங்களக் குடியேற்றவாசிகள் பெருமளவில் இடம்பெயர்ந்துள்ளனர்.

சிங்களக் குடியேற்ற வாசிகளில் 50 சத தவீமானோர் ஏற்கனவே இடம்பெயர்ந்து விட்டனர். ஏனையோர் தொடர்ந்தும் இடம்பெயருகின்றனர்.

மகாவலிப் பிரதேச சிங்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தபால்கள் இன்றுமுதல் விநியோகம்

'லங்காமுடித' கப்பலில் எடுத்து வரப்பட்ட தபால் பொதிகளைத் தரம் பிரிக்கும் வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தரம் பிரிக்கப்பட்ட தபால்கள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் விநியோகிக்கப்படும் என்று யாழ். பிரதம தபாலதிபர் திரு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

இந்த தபால் பொதிகள் நேற்றுநண்பகலேசாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரியில் இயங்கும் பிரதம தபாலகத்துக்கு எடுத்து வரப்பட்டன.

இதனால் உப தபால் நிலையங்களுக்குக் குரிய தபால் பொதிகள் இன்றுதான்

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தெய்வானை நல்லதம்பி

இருபாலையை பிறப்பிடமாகவும் தற்போது குடமியன் வரணியில் வசித்து வந்தவருமான காலம் சென்ற நல்லதம்பியின் மனைவி தெய்வானை 22 - 01 - 96 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் சாவித்திரியின் அன்புத் தாயாரும், வீரசிங்கத்தின் அன்பு மாமியாரும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்
ச. வீரசிங்கம்
(மருமகன்)

குடமியன்,
வரணி

(40222)

### கந்தர் நடராசா

தெல்லிப்பளை குருந்தாள் கொடையை சேர்ந்தவரும் தற்போது மீசாலை விக்னேஸ்வரா கல்லூரிக்கு அருகாமையில் வசித்து வந்தவருமான கந்தர் நடராசா (இளைப்பாறிய புகையிரத ஊழியர்) நேற்று முன்தினம் (21 - 01 - 96) காலமானார். இவர் இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், சந்திரசேகரன் (லங்கா சிமெந்து), கருணாகரன் (லங்கா சிமெந்து), ஜெயக்குமார் (பட்டு - ஜேர்மனி), செல்வவடிவாம்பிகைராணி, சுசிலாதேவி, ஜெயலலிதா, மல்லிகாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகலிங்கம் (ஜேர்மனி), தம்பிரத்தினம் (மத்திய மின்சார நிலையம்), சிவகுமார், இராசநந்தினி, காலஞ்சென்ற விஜயகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் மீசாலை இல்லத்தில் நேற்று 22 - 01 - 96 பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சந்திரசேகரம்
கருணாகரன் (ராசன்)

மீசாலை தெற்கு,
மீசாலை.

(40220)

### மாரிமுத்து சிவகாமிப்பிள்ளை

கோப்பாய் தெற்கை பிறப்பிடமாகவும், கிளிநொச்சி தொண்டமான் நகரை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து சிவகாமிப்பிள்ளை 21 - 1 - 96 காலமானார்.

இவர் சி. மாரிமுத்துவின் அன்புத் துணைவியாரும், இரத்தினமலர், செல்வராசா, கோணேஸ்வரி, காலஞ்சென்ற சிவராசா, அகிலாண்டேஸ்வரி (ஆஸ்ரேலியா), சிங்கராசா (பிரான்ஸ்), நவரத்தினராசா (பிரான்ஸ்), குகதாசன் (கனடா), மகிழ்மலர் (கனடா), கனகராசா (கனடா), பாலக்கிருஷ்ணராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசரத்தினம், ஜெயராணி, பரமானந்தம், அருந்தவமலர் (திருகோணமலை), நவரத்தினம் (ஆஸ்திரேலியா), றாஜினி (பிரான்ஸ்), மாலா (பிரான்ஸ்), கலாதேவி (கனடா), சந்திரசேகரமூர்த்தி (கனடா), தமிழ்அரசி (கனடா), குமுதினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்லம்மா, காங்கேசு ஆகியோரின் சிறிய தாயாரும், சின்னத்துரை, சிவபாக்கியம் ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் (21-1-96) அன்று நடைபெற்றன.

தகவல் :
மா. செல்வராச
(மகன்)

(40501)

### வல்லிபுரம் சுப்பையா
(இணுவில் மேற்கு)

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட வல்லிபுரம் சுப்பையா 21 - 1 - 96 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவரும், வசுந்தராதேவி, மனோரஞ்சிதம், சிவகுமாரன் (ஆசிரியர் — இணுவில் மத்திய கல்லூரி), மகேஸ்வரி, சண்முககுமார் (பிரதி அதிபர் — ஞானபண்டித வித்தியாசாலை, கொக்குவில்), சண்முககுலகுமாரன் (பிரதி அதிபர் — இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சோதிலிங்கம் (கல்வித் திணைக்களம், திருகோணமலை), சிவநாதன் (ஆசிரியர் — உடுவில் அ. த. க. பாடசாலை), விஜயவேணி, சிறிகரன் (லங்கா சிமெந்து லிமிட்டெட்), அருள்மதி (ஆசிரியை — இணுவில் மத்திய கல்லூரி), சுகிந்திராதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், நேசராஜா (கொக்குவில் இந்துக் கல்லூரி உயிரியல் பிரிவு), ஜானகி, செந்தூரன், திருக்குமரன், ஜமுனா, ராகவன், சொரூபன், ஜனார்த்தனன், மயூரன், அர்சனா, அருள்பவன், சஜீவன் ஆகியோரின் அன்புப் பேரனும், இராசதுரை, திருநாவுக்கரசு, பொன்னம்மா, காலஞ்சென்றவர்களான குமாரலிங்கம், அன்னப்பிள்ளை, குலத்துங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் மீசாலை வடக்கு சிறிகாந்தன் வீதியில் அமைந்திருக்கும் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நேற்று (22 - 01 - 96) வேம்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

உற்றார், உறவினர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
சு. சிவகுமாரன்
(மகன்)

சிறிகாந்தன் வீதி,
மீசாலை வடக்கு.

(40227)

---

புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தலினால்

# மிகக் குறைந்த அளவு கப்பல்களே கொழும்புத் துறைமுகம் வருகின்றன

## அரசுக்குப் பெரும் நட்டம்

கொழும்பு, ஜன. 2

கொழும்புத் துறைமுகத்துக்கு வரும் கப்பல்கள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்தில் கப்பல் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு வலயம் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து—

கொழும்புத் துறைமுகத்துக்கு தரித்து நிற்க வரும் வெளிநாட்டுக் கப்பல்களின் எண்ணிக்கை பெருமளவில் வீழ்ச்சி கண்டுள்ளது.

அதனால் உள்நாட்டு கப்பல் போக்குவரத்து முகவர்களின் தொழிலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது;

கொழும்புத் துறைமுகத்துக்கு வரும் கப்பல்களை விடுதலைப்புலிகள் தாக்கலாம் என்ற தகவல்களைத் தொடர்ந்து துறைமுக அதிகார சபை கடந்த டிசம்பர் மாதம் தொடக்கம் கப்பல் கட்டுப்பாட்டு வலயம் ஒன்றை அறிவித்தது.

அதனால்—

இந்த வலயத்துக்குள் வரும் கப்பல்கள் வழமையை விட மேலதிக போர் ஆபத்து காப்புறுதி செய்து கொள்ள வேண்டிய தேவை உருவானது லண்டனில் உள்ள போர் ஆபத்துக் குழு கொழும்புத் துறைமுகத்துக்கு வரும் கப்பல்கள் மேலதிக ஆபத்து காப்புறுதி செய்து கொள்ள வேண்டும் என்று அறிவித்தது.

இதனால் பல கப்பல் போக்குவரத்து நிறுவனங்கள் கொழும்புத் துறைமுகத்துக்குக் கப்பல்களை அனுப்பத் தயங்குகின்றன.

இதன் விளைவாக உள்நாட்டில் உள்ள கப்பல் போக்குவரத்து முகவர் நிறுவனங்கள் பலவும் மூடப்படும் அபாயம் தோன்றியுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

கப்பல்கள் பலவும் தமது வழியில் தரித்து நிற்பதற்குக் கொழும்புத் துறைமுகத்துக்கு வராமல் தவிர்த்துக்கொள்வதால் துறைமுகக் கூட்டுத்தாபனத்துக்கும் வருமானத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்படும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இவை குறித்து அண்மையில் இலங்கை கப்பல் போக்குவரத்து முகவர்கள் சங்கத்தினர் கப்பல்துறை அமைச்சின் செயலாளர் எம். என். எம். ஜுனைத்தைச் சந்தித்து தமது கஷ்டங்களை எடுத்துரைத்தனர். (அ)

### மோட்டார் சைக்கிள் விபத்து ஒருவர் காயம்

மந்திகை, ஜன. 23

பருத்தித்துறை கிராமக் கோட்டடியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

கைதடியைச் சேர்ந்த வடிவேலு வசந்தன் (வயது19) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற இவர் தம்முடன் நாய் ஒன்றையும் வைத்திருந்தார்.

நாயின் சங்கிலி சில்லில் சிக்கியே விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-15)

### தாதியர் பரீட்சை 27 ஆம் திகதி கிளிநொச்சியில்

கிளிநொச்சி, ஜன. 23

தாதியர் பயிற்சிக்கான பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னியில் தங்கி இருக்கும் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவது குறித்து கொழும்புக்கு சென்றிருக்கும் கல்விப் பணிப்பாளர் திரு. துரைசிங்கம் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவார் என்று உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. க. தர்மரட்ணம் தெரிவித்தார்.

### தொழிலாளர் நலன் காக்கும் நிதியம்

இன்பருட்டி கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பினர் தொழிலாளர் நலன் காக்கும் நிதியம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

ஏனைய தொழில் செய்பவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு நிதியம் அமைத்து அதன் மூலம் நிவாரணம் வழங்குவது போல கடற்றொழிலாளர்களுக்கும் கடலிலோ, கரையிலோ எதிர்நோக்கும் பாதிப்புக்களுக்கு நிவாரணம் வழங்குவதே இதன் நோக்கம் என அமைப்பின் [illegible] கூறினார்.

(இ-152)

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி குணமணி சின்னத்தம்பி

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த திருமதி குணமணி சின்னத்தம்பி 22- 01- 96 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டிதர் முருகேசு சின்னத்தம்பி (முன்னைநாள் அதிபர், வீரகத்தி மகாவித்தியாலயம் தொண்டமானாறு) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நவரத்தினம் [C. G. R], காலஞ்சென்ற ஜெயராஜா [முன்னைநாள் அதிபர் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சி கலாசாலை], ஞானாதிக்கம் (அவுஸ்திரேலியா), அருள்பிரகாசம் [கனடா] ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இளைப்பாறிய ஆசியர் கந்தையா (U K), காலஞ்சென்ற வீரகத்தி, ஆழ்வாப்பிள்ளை [மனேச்சர்], காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை, சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று [23- 01- 96] செவ்வாய்க்கிழமை மாலை மூன்று மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கட்டைவேலி மெதடிஸ்த சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மருமக்கள்

திருமதி சறோ சத்தியானந்தன்
[ஆங்கில ஆசிரியர், நாகேஸ்வரி வித்தியாலயம், சுன்னாகம்],
வினோ குருபாதம்
[யாழ். வர்த்தக வங்கி]

கோயிற்சந்தை,
கட்டைவேலி கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி

(40224)

### திருமதி மனுவேற்பிள்ளை றோசம்மா

நாரந்தனை மேற்கைப் பிறப்பிடாக கொண்டவரும், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி இல. 814 (432), இல்லத்தை வசிப்பிடமாக கொண்டவருமான திருமதி மனுவேற்பிள்ளை றோசம்மா 24- 11 -95 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை மனுவேற்பிள்ளை (முத்துதம்பி - வியாங்கொடை, வர்த்தகர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சவரிமுத்து, பொன்னையா, மாணிக்கத்தின் அன்பு சகோதரியும், யோசபின், றெஜினா, நைஜிரியாவில் காலஞ்சென்ற யேசுதாசன், மனோன் (லண்டன்), கொன்சேகா (லண்டன்), இராசநாயகம் (ராசு— ஆஸ்திரேலியா), எல்மோ (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பீற்றர் (இளைப்பாறிய அரசாங்க உத்தியோகஸ்தர்), தேவசகாயம், பொன்ராணி, தர்மலிங்கம், Dr. கமலசாந்தி, கலா, காந்தி ஆகியோரின் மாமியாரும், அன்ரனிப்பிள்ளை (டயானி இன்டஸ்றீஸ்), பஸ்ரியன், பற்றிக் ஆகியோரின் பெரியம்மாவும், புனிதன், Rev. Fr. பரம்வளன், றதி, ஜஸ்ரின், றஞ்சனி, ஜெறோம், சசிகலா, கேளி, தேவநேசன், ஜக்குலின், கரோலின், ஜஸ்லின், மெர்லின், நிமால், ஷம்கி, ஜெய்சன், ஜெசிக்கா, றஜித்தா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 25 - 11 - 95 இல் கொஞ்செஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அவரது ஆத்ம சாந்திக்காக நாளை 24- 1 96 இல் பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் காலை 6.00 மணிக்கும், சாவகச்சேரி கச்சாய் வீதியில் அமைந்துள்ள புனித விகோரியார் ஆலயத்தில் காலை 8 மணிக்கு இரங்கல் பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

தகவல்:
John. தேவசகாயம்
Rtd. D. O. R. D.

(40225)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதெல்லை இன்றி எல்லோரும் இணைய வேண்டும்

# களத்தில் போராடுவதே உண்மையான பங்களிப்பு

## போராளியாக மாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர்

கிளிநொச்சி, ஜன. 23

பாதுகாப்பு நிதி செலுத்துவதை போராட்டத்திற்கான பங்களிப்பு என்று நினைக்கக் கூடாது. அது போராட்டத்துக்கு வழங்கப்படும் ஊக்குவிப்பே.

எவனொருவன் ஆயுதப் பயிற்சி பெற்று, தேசியத் தலைவரின் உறுதிமொழியை ஏற்று களத்திலே நின்று போராடுகின்றானோ —

அவன்தான் உண்மையான தமிழீழப் போராட்டப் பங்காளியாக முடியும்.

எனவே வயது எல்லை பாராது தேகாரோக்கியம் உள்ள சகலரும் போராட்டத்தில் பங்காளிகளாக வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் கரைதுறைப்பற்று கோட்டக் கல்வி அலுவலகத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமை புரிந்து, இப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்துள்ள 56 வயதான நல்லையா பரமானந்தன்.

வவுனியாவைச் சேர்ந்த திரு. பரமானந்தன் உதயனுக்கு வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்தாவது:-

இரண்டு லட்சம், மூன்று லட்சம் ரூபா பணத்தைப் பாதுகாப்பு நிதிக்கு வழங்கி விட்டோ அல்லது காணிகள், வீடுகளை இயக்கத்திடம் கொடுத்து விட்டோ, போராட்டத்துக்குத் தாம் பங்களிப்புச் செய்து விட்டதாகச் சிலர் நினைக்கின்றார்கள்.

உண்மையில் அவை, போராட்டத்துக்கான பங்களிப்புகள் இல்ல; ஊக்குவிப்புகளே.

பாதுகாப்பு நிதி செலுத்துவது என்பது உழைக்கும் பணத்தில் அரசுக்குத் திறை செலுத்துவது போன்றதே.

தமிழீழம் விரைவில் மலரப் போவது உறுதி. அவ்வாறு தமிழீழம் மலரும் போது கைகொட்டி, பாட்டிசைத்து அதனைக் கொண்டாட களத்தில் நின்று போராடிப் பங்களித்த போராளிக்கு மட்டுமே முதல் உரிமை உண்டு,

போராட்டத்தில் பங்களிக்க கூடிய எவரும் எனது குடும்பத்தில் இல்லை. அதனாலேயே நான் போராளியாகுவதற்கு முடிவுசெய்தேன்—

எமது வயதினரை ''நைன்ரிகள்'' என்றும், வயதுபோனவர்கள் என்றும் சிலர் கருதுகிறார்கள்.

இலங்கைக்கு பாலம் போட்ட அனுமனுக்கு அணில் ஒன்று செய்த உதவி பேருதவியாக மாறியதை இராமாயணத்தில் படிக்கிறோம். அதே போல போராட்டத்தில் பங்களித்து உதவ முடியும்.

இளம் போராளிகளால் பெரிய முகாம்களைத் தாக்க முடியுமானால் —

அத்தகைய தாக்குதல்களின் போது, எம்மைப் போன்றவர்கள், ஓர் ஓரத்தில் நின்று ஒரு சில எதிரிகளையாவது சுட்டு வீழ்த்தக் கூடிய பலமும் தைரியமும் எமது வயதினருக்கு உண்டு.

ஆகையால் வயதெல்லை இன்றி போராட்டத்தில் இணையவேண்டும்— என்று அவர் கூறினார்.

(அ-9)

## பொழுதுபோக்கு இடமாக இரணைமடுக் குளம்

அக்கராயன், ஜன. 23

யாழ். குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது கிளிநொச்சியில் வசிக்கும் மக்களின் பொழுதுபோக்கு இடமாக இரணைமடுக் குளம் மாறி வருகிறது.

மாலை நேரங்களில் பெரும் எண்ணிக்கையானோர் இரணைமடுக் குளம் வருகின்றனர்.

புகைப்படம் எடுப்பதிலும், பட்டம் விடுவதிலும் அவர்கள் ஈடுபடுவதை நாளாந்தம் காணமுடிகிறது.

(இ-20)

## இப்படியும் கிண்டல்!

கொழும்பு, ஜன. 25

அரசாங்கத்தின் ராணுவப் பலவீனங்களை கொழும்பில் இருந்து வெளிவரும் பத்திரிகைகள் பலவும் அடிக்கடி வெளிப்படுத்தி வருகின்றன.

சில பத்திரிகைகள் அவற்றைக் கிண்டலாகவும் மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றன.

''யுக்திய'' பத்திரிகை தனது கடந்த ஞாயிறு பதிப்பில் வெளியிட்ட கிண்டல் செய்தி ஒன்று வருமாறு:-

பாதுகாப்பு அமைச்சர் படைத்தளபதியைச் சந்திக்கச் சென்றார்.

அப்போது படைத்தளபதி எதிரிகளிடமுள்ள விமான எதிர்ப்பு ஏவுகணைகளை எவ்வாறு அழிக்கலாம் என பாதுகாப்பு அமைச்சரிடம் கேட்டார்.

''படைத்தளபதியே, ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். எங்களிடம் இரண்டு விமானங்கள் மாத்திரமே உள்ளன. அவற்றை எதிரிகள் ஏவுகணைகளால் அழிக்கலாம். அதன் பின்பு எதிரிகள் ஏவுகணைகளால் அழிப்பதற்கு எம்மிடம் விமானங்கள் எவையுமிருக்காது'' என்றார் பாதுகாப்பு அமைச்சர்.

''அமைச்சரே, நான் அதைக் கேட்கவில்லை, ஏவுகணைகளை எவ்வாறு அழிக்கலாம் என்றே கேட்டேன்'' என்றார் படைத்தளபதி.

''அதற்கு மற்றுமொரு வழியுண்டு மேலும் மேலும் விமானங்களை வாங்க வேண்டும். எதிரிகள் அவற்றை ஏவுகணைகளைக் கொண்டு தாக்குவர். அப்போது எதிரிகளிடமுள்ள ஏவுகணைகள் முடிவடைந்து விடும்'' என்றார் பாதுகாப்பு அமைச்சர்

இப்படி 'யுக்திய' தெரிவித்துள்ளது. (இ-10)

சந்திரசேகரனின்

## மெய்ப்பாதுகாவலர் மீது குண்டர்கள் தாக்குதல்

கொழும்பு, ஜன. 23

பொது வசதிகள் பிரதி அமைச்சரும், மலையக மக்கள் முன்னணித் தலைவருமான எஸ். சந்திரசேகரனின் மெய்ப்பாதுகாவலர் தலவாக்கலை நகரில் வைத்து குண்டர் குழு ஒன்றினால் தாக்கப்பட்டர் என பொலீஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பொங்கலுக்கு முதல் நாள் தலவாக்கலை நகரத்தில் உள்ள தமிழரின் சலூன் ஒன்றை குண்டர்கள் சிலர் தாக்கிய சம்பவம் இடம்பெற்றதாகவும்—

இது குறித்து பிரதி அமைச்சர் சந்திரசேகரன் பொலீஸாரிடம் பேசியதாகவும் –

பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று குண்டர்களைக் கலைத்ததாகவும்—

அதையடுத்து பிரதி அமைச்சரின் மெய்ப்பாதுகாவலர் தாக்கப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)


மக்களின் மகிழ்ச்சிக்கு,

சேரனின் சிறப்புச் செய்தி!

# "சேரன் புடைவை வாணிபம்"

(யாழ். நகரில் இயங்கி வந்த எழினி புடைவை வாணிபம்)





24 - 01 - 1996 (புதன்கிழமை) அன்று

கச்சாய் வீதி, சாவகச்சேரியில்

நண்பகல் 12-00 மணியளவில்

மங்களகரமாக திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

இங்கு சேலைகள், வேட்டிகள், சேட்டிங், சூட்டிங், நவீன வடிவில் தைத்த ஆடைகள், மற்றும் வியாபாரிகள், தையல் நிலையத்தினருக்கான துணி வகைகள் அடங்கும்.

# சேரன் புடைவை வாணிபம்

கச்சாய் வீதி, சாவகச்சேரி. (சி/2947)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

பெண்களின் ஹீரோ சைக்கிள். தொடர்பு: Dr. சுறாஜ் சோமசுந்தரம், கேணியடி வீதி, பழைய விக்னேஸ்வரா பாடசாலையடி ஒழுங்கை, மீசாலை மேற்கு. (40212)

புத்தம் புதிய நல்ல நிலையிலுள்ள Yamaha (Mate 90), சிவப்பு, சமீப காலத்தில் கொண்டுவரப்பட்டது. விற்பனைக்குண்டு. தொடர்பு: சோ. உமாசங்கர், நெடியகாடு, வல்வெட்டித்துறை. (40091)

புதிய றொபின் EY20 நீர் இறைக்கும் இயந்திரம் உடன் விற்பனைக்குண்டு. கிளீன் கட், பழைய நீதிமன்றம் முன்பாக, யாழ் வீதி, சாவகச்சேரி. (39985)

### போத்தல் தேவை

ஹார்லிக்ஸ்/வீவா, ஜாம் வெற்றுப் போத்தல்களை பருத்தித்துறையில் வேலவன் ஸ்ரோர்ஸ், தீன்சுவை பேக்கவுஸ், செல்வராஜா ஸ்ரோர்ஸ், குட்டி ஸ்ரோர்ஸ், ரதி ஸ்ரோர்ஸ் ஆகியவற்றில் ஒப்படைத்துப் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும். ரேஸ்ட்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட். (சி-3166)

### வீடு தேவை

பருத்தித்துறையில் வீடு வாடகைக்குத் தேவை. வாடகை முற்பணம் கொடுக்கப்படும். தொடர்புகொள்ளவும். சிவகுமரன் பிடவை மாளிகை, பருத்தித்துறை. (40081)

### தேவை

பற்சிகிச்சைக்குரிய கதிரை (Dental Chair) உடன்தேவை. தொடர்பு: "சரோஜினி வாசம்", கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-3177)

### அறை தேவை

யாழ். பல்கலைக்கழக ஊழியர் உட்பட இரு ஆண்களுக்கு தென்மராட்சியில் அறை வாடகைக்கு தேவை விவரங்களுடன் தொடர்பு கொள்க. மே/பா உதயன், இல. 521. (40200)

### வகுப்பு

வட இலங்கை சங்கீத சபை பரீட்சைக்கு அமைய வயலின், மிருதங்க வகுப்பு நடத்தப்படும். பயில விரும்பும் மாணவ, மாணவிகள் பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும். பிரம்மஸ்ரீ V. மோகன்சர்மா, பெருங்குளம் பிள்ளையார் கோவில் அருகாமையில், கல்வயல், சாவகச்சேரி. (39995)

### வியாபாரிகளுக்கு

இமிரேஷன் கோல்ட் கவறிங் நகைகள், அழகு சாதனப்பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள், பிளாஸ்டிக் வகைகள், லேஸ் நூல் வகைகள், சிறுவர்களின் பாவனைப் பொருள்கள், விளையாட்டுப் பொருள்கள், சில்வர் பாத்திரங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். ஜெயா அழகு மாடம் யாழ். வீதி, கிளிநொச்சி. [நீதிமன்றம் முன்பாக). [சி/3176]


# 3 தபாலகங்களின் ஊழியரையும் கொழும்பு வருமாறு பணிப்பு

சாவகச்சேரி, ஜன. 23

காங்கேசன்துறை சுன்னாகம், இளவாலை தபால் நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களையும் கொழும்புக்கு வருமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை அஞ்சல் மா அதிபர் அனுப்பி வைத்துள்ளார்.

ஏற்கனவே யாழ். பிரதம தபாலக ஊழியர்களை கொழும்பு வரும்படி பணிக்கப்பட்டது தெரிந்ததே.

மேற்படி தபால் நிலையங்கள் இடம்பெயரும் போது எடுத்துவரப்பட்டுள்ள தஸ்தாவேஜுகளையும் கொண்டு வருமாறும் அஞ்சல்மா அதிபர் அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தத் தபாலகங்களில் பணிபுரியும் 200க்கும் மேற்பட்ட ஊழியர்களை கொழும்புக்கு அழைத்து அவர்களைக் கொண்டு மேற்படி தபாலகங்களை வலிகாமத்தில் பழைய இடங்களில் இயங்க வைக்க அரசு முடிவு செய்துள்ளது என்று கூறப்படுகிறது. (இ-7)

# தனது தார்மீக கடமையில் இருந்து அரசு நழுவிவிடப் பார்க்கிறது

## முஸ்லிம் காங்கிரஸ் அறிக்கை

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அதிகார அலகு விடயத்தை தீர்மானிக்கும் பொறுப்பை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் கையளிப்பதன் மூலம் அரசு தனது தார்மீகக் கடமையிலிருந்து நழுவிவிடப் பார்க்கிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஏ. எம். ஜவாத் மரிக்கார் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலில் இனப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பது என்ற வாக்குறுதியுடனேயே அரசு பதவிக்கு வந்தது.

தனது வாக்குறுதியை நிறைவேற்றும் அவசரத்தில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒரு யோசனையை முன்வைத்தது. எல்லோரும் எதிர்பார்த்தது போன்றே சிங்களப் பேரினவாதிகள் அதனை எதிர்த்தனர்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்த முறிவு அரசுக்கு அந்த யோசனையை சுலபமாக கைவிடுவதற்கு வழிவகுத்துவிட்டது.

தருணம் பார்த்திருந்த சிங்களப் பேரினவாதிகள் இராணுவ மேலாதிக்கத்தை முடுக்கி விட்டு யாழ்ப்பாணத்தை கைப்பற்றி சிங்கக் கொடியை ஏற்றியதன் மூலம் தமது நாள்பட்ட காயத்துக்கு ஒத்தடம் கொடுத்தனர்.

அத்துடன் நியாயமான ஒரு அரசியல் தீர்வை விரைவான வழியில் அடையும் நிலையைக் கேள்விக்குறியாக்கி விட்டன.

இப்படி தமது அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# செஞ்சிலுவை தொண்டர்கள் இரத்த தானம்

வடமராட்சி, ஜன. 23

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களில் மேலும் நால்வர் மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலையில் இரத்த தானம் செய்தனர்.

இங்குள்ள இரத்த வங்கியில் இரத்தத்துக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டதைத் தொடர்ந்து அவசர நோயாளர்கள் கஷ்டப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை பருத்தித்துறைப் பிரிவுத் தொண்டர்கள் நால்வர் இரத்ததானம் செய்தனர்.

இதற்கு முன்னரும் இதே பிரிவைச் சேர்ந்த நால்வர் இரத்த தனம் செய்தது குறிப்பிடத்தக்கது. (இ-118-173)

# தேங்காய் விலை உயர்வு

தென்மராட்சி, வடமராட்சிப்பகுதிகளில் தேங்காய் விலை கணிசமான அளவு உயர்ந்துள்ளது.

பளை, பச்சிலைப்பள்ளி, முகமாலை, எழுதுமட்டுவாள் மற்றும் கொடிகாமம், சாவகச்சேரி போன்ற இடங்களில் முன்னர் 10 ரூபா முதல் 15 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட தேங்காய் இப்போது 20 ரூபா முதல் 22 ரூபா வரை விற்பனையாகின்றது.

மேற்குறித்த இடங்களுக்கு தென்மராட்சியின் ஏனைய இடங்களில் இருந்தும வடமராட்சியில் இருந்தும்தேங்காய் வியாபாரிகள் தேங்காய் கொள்வனவுக்காக தினமும் படையெடுக்கின்றனர்.

நெல்லியடி, பருத்தித்துறை கரவெட்டி போன்ற சந்தைகளில் தேங்காய் 25 ரூபா முதல் 30 ரூபா வரை விற்கப்படுகின்றது.

தேங்காயின் விலை உயர்வினால் தேங்காய் களவுகளும் அதிகரித்துள்ளன.

கடந்த சில தினங்களாக எழுதுமட்டுவாள். பளை, முகமாலை போன்ற இடங்களில் உள்ள தென்னந்தோட்டங்களில் இரவு வேளையில் தேங்காய் களவுகள் இடம்பெற்றுள்ளன. (இ-152)

# கிளிநொச்சிக்கு ரி. டி. எம். பசளை

கிளிநொச்சி விவசாயிகளுக்கு ரி. டி. எம். பசளை கிடைத்துள்ளது.

600 அந்தர் பசளை அங்கு அனுப்பப்பட்ட போதிலும் பயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான அமோனியம் சல்பேற் கிடையாதபடியால் ரி. டி. எம். பசளையினால் பெரிதாகப் பயன் எதுவும் இல்லை என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# அந்தோனியார் ஆலயத்தில் பொங்கல் விழா

சாவகச்சேரி, ஜன. 23

கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் கடந்த 15 ஆம் திகதி பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

கரவெட்டிப் பங்கின் இளைஞர், யுவதிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த பொங்கல் வழிபாட்டில் ஏராளமானோர் கலந்துகொண்டனர். வழிபாட்டின் முடிவில் அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது.

பங்குத் தந்தை ப. யோ. ஜெபரட்ணம் அடிகள் வழிபாட்டை நடத்தி தலைமை உரை நிகழ்த்தினார். அருட் தந்தை மத்தாயஸ் அடிகள் மறையுரை நிகழ்த்தினார். (இ)

# மரத்திலிருந்து விழுந்து காயம்

மந்திகை, ஜன. 23

கள்ளிறக்குவதற்காக பனை மரத்தில் ஏறிய ஒருவர் பனையில் இருந்து தவறி விழுந்து படுகாயமடைந்தார்.

கொடிகாமம், சாளிகோவிலடிப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த சண்முகம் பலேந்திரராசா (வயது [illegible]) என்பவரே படுகாயமடைந்தவராவார். (உ-15)


## திணைக்கள அலுவலர் அடையாள அட்டைக்கான
# கூறுவிலை கோரல்

சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்

அலுவலர்களுக்கான அடையாள அட்டைகளை முழுமையாகத் தயாரித்து வழங்குவதற்கான கூறு விலைகள் என்னால் கோரப்படுகின்றன. விவரம் வருமாறு;

படப்பிடிப்பு:- கலர்ப்படம்/கறுப்பு வெள்ளை காட் அச்சிடுதல், கவரிடுதல் [லெமனற்றிங்], கிளிப்போடுதல், அரச முத்திரை பதித்தல், செஞ்சிலுவைச் சின்னம் பதித்தல், எனது நிர்வாக எல்லைக்குள்ளுள்ள வைத்திய நிறுவனங்களுக்குச் சென்று படம் எடுத்தல்.

இதனைச் செய்து வழங்கக்கூடியவர்கள் படம் கலர்/கறுப்பு — வெள்ளைக்கு வெவ்வேறாக கூறுவிலைகள் தயாரித்து, **05-02-1996** திகதிக்கு முன்னதாக மாகாண பிரதிப் பணிப்பாளர், சுகாதார சேவைகள் திணைக்களம், சாவகச்சேரி என்றும் முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மேலும் விவரங்களுக்கு அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

க. தா. சிவபாதம்
மாகாண பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள் திணைக்களம்,
சாவகச்சேரி.

(சி/3170)

# லாவண்யா

## பல் மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை நவீனமுறையில் பரிசோதித்து உடன் கண்ணாடி பெறவும், பற்களை சிறந்த முறையில் ஒரே நாளில் கட்டிக் கொள்ளவும் வடதமிழீழத்தில் உள்ள ஒரே ஸ்தாபனம் "லாவண்யா"

உரிமையாளர் –
டாக்டர் றெஜி சொலமன்

கண்டி வீதி,
சாவகச்சேரி,
(A. G. A. காரியாலயம்,
முன்பாக).

கிளை:-
யாழ். வீதி, நெல்லியடி.
(மகாத்மா தியேட்டர் அருகில்)

(சி/3178)


# கண்ணீர் அஞ்சலி

பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னை நாள் அதிபர்

## அமரர். பே. பரமேஸ்வரநாதன்

அவர்களின் பிரிவை அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், விரிவுரையாளர்கள்,
ஆசிரிய மாணவர்கள், ஊழியர்கள்.

பலாலி ஆசிரிய கலாசாலை,
திருநெல்வேலி.

(40223)

## 31 ஆம் நாள்
# கண்ணீர் அஞ்சலி

எமது வகுப்பு மாணவன

## ஸ்ரீவேல்நாதன் பிரணவன்

இறைபதமடைந்ததையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

10 E மாணவர்கள் (95)
யாழ். இந்துக் கல்லூரி

(40221)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## விரயமாகும் சக்தி

வலிகாமத்தில் சிவில் நிர்வாகத்தை நடத்தி, தனது இராணுவ வெற்றியை அர்த்தமுள்ளதாக — பயனுள்ளதாக — ஆக்கிவிட வேண்டும் என்பதில் ஜனாதிபதி சந்திரிகா வெகு தீவிரமாகச் செயற்படுகிறார்.

அதன் பொருட்டு, அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு கவர்ச்சி காட்டும் நடவடிக்கைகளை முடுக்கி விட்டிருக்கிறார்.

அந்த நடவடிக்கைகள், இப்போதைக்கு, அனேகமாக வலிகாமத்தைச் சேர்ந்த அரசாங்கப் பணியாளர்கள் மீது அழுத்தங்களைப் போடுவதாகவே அமைந்துள்ளன.

இந்த வகையில் —

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து கொழும்பில் போய் தங்கி நிற்கும் 200 ஆசிரியர்களையும் அவர்களது பழைய இடத்துக்குக் கூட்டிச் செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

இதே போல, யாழ்ப்பாணம் பிரதம தபாலகம் மற்றும் காங்கேசன்துறை, சுன்னாகம், இளவாலை தபாலகங்களைச் சேர்ந்த பணியாளர்களையும் அங்கே வருமாறு அழுத்தம் போடும் முயற்சி நடைபெறுகிறது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை இயங்கச் செய்வதற்காக வைத்தியர்களை அங்கு சென்று பணிபுரியுமாறு சந்திரிகா தாமே வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

வலிகாமத்தில் சிவில் நிர்வாகம் நடப்பதாகக் காட்டி, அங்கிருந்து இடம்பெயர்ந்தவர்களை எப்பாடுபட்டும் திரும்பச் செய்துவிட வேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கம்.

அதனால், இப்போது அரச பணியாளர்கள் மீது போடப்படும் அழுத்தங்கள் பொது மக்கள் மீதான அழுத்தங்களாக விஸ்தரிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை.

வலிகாமத்திலிருந்து ஆக்கிரமிப்பு இராணுவத்தை விலக்குவதற்கான எண்ணம் எதுவும் அரசுக்கு இல்லை. விடுதலைப் புலிகளுடனான போரை நிறுத்தி, அமைதிச் சூழ்நிலையை உருவாக்கி, மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வகைசெய்யும் சிந்தனையும் அதனிடம் இல்லை.

போரைத் தொடர்ந்து கொண்டு, பெயருக்கு அதிகாரப் பரவல் தீர்வுத் திட்டம் ஒன்றையும் முன்வைத்து காலத்தைக் கழிப்பதே சந்திரிகாவின் உண்மையான இலக்காக உள்ளது.

இந்த உத்தி ஒருபோதும் வெற்றி அளிக்கப்போவதில்லை. போர் தொடரும் வரை அரசியல் தீர்வு ஒன்றை செயல்வடிவமாக்குவது இயலாத காரியம்.

இராணுவ ரீதியாக மேலோங்கிய நிலையில் நின்று கொண்டு தமிழர்கள் மீது ஒரு தீர்வைத் திணிக்க முடியும் என்று அரசு நினைப்பதும் ஆகப்போவதில்லை.

தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகாது என்பதனை உணர்ந்து, அதனைப் புறந்தள்ளுவதற்கு சந்திரிகா அரசு தீர்மானிக்கும் வரை, நாட்டில் அமைதியோ சமாதானமோ உருவாகப் போவதில்லை.

எனவே, வலிகாமத்தில் சிவில் நிர்வாகம் நடத்துவதாகக் காட்டுவதில் விரயம் செய்யும் தனது சக்தியை, போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு சந்திரிகா ஆற்றுப்படுத்தினால் ஆக்கபூர்மாக அமையும்.

# வடக்கு - கிழக்கு கல்வி நிர்வாகம் பரவலாக்கல் ஏப்ரலுக்கே நடைமுறை

சாவகச்சேரி, ஜன. 23

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கல்வி நிர்வாகத்தை பரவலாக்கும் வகையில் வலயங்களை உருவாக்கும் திட்டம் ஏப்ரல் மாதத்திலேயே நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் ஏழு வலயங்களையும்—

யாழ்ப்பாணத்தில் 3 வலயங்களையும்— ஜனவரி முதல் இயங்க வைக்க மத்திய கல்வி அமைச்சு அனுமதி வழங்கியது.

மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை கல்வி மாவட்டங்களுக்கு மேலும் ஒரு வலயம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்த காரணத்தால் இத்திட்டத்தை இம் மாதத்தில் நடைமுறைப்படுத்த முடியாது போனதாகவும்—

இவ் விடயம் குறித்து தற்போது மத்திய — மாகாண கல்வி அமைச்சுக்கள் ஆராய்ந்து வருவதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் குறித்து முடிவு எடுக்கப்பட்டு ஏப்ரல் மாதத்தில் புதிய திட்டத்தை அமுல் செய்ய முடியும் என்று மாகாண சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## வவுச்சர்கள் காசோலைகள் வங்கிகளுக்கு

சாவகச்சேரி, ஜன. 23

உள்ளுராட்சி ஓய்வூதியர்களுக்கான இம்மாத வவுச்சர்களும், காசோலைகளும் நேரடியாக அந்த அந்த வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று ஓய்வூதியக் கிளை கணக்காளர் திரு. கா. வீரசிங்கம் தெரிவித்தார்.

(இ-3)

## வெற்றிடங்களை நிரப்ப மாகாண நிர்வாக சேவை

சாவகச்சேரி, ஜன. 23

கல்வி நிர்வாக அமைப்பை பரவலாக்கும்போது ஏற்படவிருக்கும் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் மாகாண நிர்வாக சேவை ஒன்று உருவாக்கப்படுகிறது.

புதிய திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் வலயங்களில், வலயப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கு ஸ்ரீலங்கா நிர்வாக சேவையில் உள்ளவர்கள் தேவையாக உள்ளதால் இந்த சேவையை வடக்கு-கிழக்கு மாகாணசபை ஆரம்பிக்கவிருக்கிறது.

அதிபர் சேவையின் தரம் ஒன்றில் பதவி நிலையில் உள்ள அதிபர்கள் இந்த சேவையில் உள்வாங்கப்பட இருப்பதாகவும்—

இதற்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்பட இருப்பதாகவும்— தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## 4 ஆம் கட்ட நிவாரணம் 25 ஆம் திகதி முதல்

இடப்பெயர்ந்த மக்களுக்கான 4 ஆம் கட்ட நிவாரண விநியோகம் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்படவுள்ளதாக செயலக புனர்வாழ்வுப் பிரிவு திட்டப் பணிப்பாளர் திரு. கா. பாலகிருஷ்னன் தெரிவித்தார்.

பங்கீட்டு அட்டைகளை மீளாய்வு செய்யும் பணிகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன என்றும்—

மீளாய்வு செய்யப்பட்ட பங்கீட்டு அட்டைகளுக்கே இம்முறை நிவாரணம் வழங்கப்படும் என்றும்— அவர் தெரிவித்தார்.

மீளாய்வு செய்யப்படாத பங்கீட்டு அட்டைகளை வைத்திருப்போருக்கு எக்காரணம் கொண்டும் நிவாரணம் வழங்கப்படமாட்டாது என்றும் அவர் கூறினார். (இ-3)

## கிளிநொச்சிக்கு தபால் பொதிகள்

கிளிநொச்சி மாவட்டத்துக்குரிய தபால் பொதிகள் கடந்த சனியன்று இங்கு வந்து சேர்ந்தன.

இம்முறை பெரும் எண்ணிக்கையான வெளிநாட்டுக் கடிதங்கள் வந்துள்ளன என்றும் —

தபால்களை உடனடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் — தபால் அதிபர் திரு. என். கே. திருச்செல்வம் தெரிவித்தார்.

## பிரதிப் பொலீஸ்மா அதிபர் வடக்கில் கட்டாய சேவை

சகல பிரதிப் பொலீஸ் மா அதிபர்களும் கட்டாயமாக வடக்குக் கிழக்கில் குறைந்தது ஆறுமாதங்களாவது பணியாற்ற வேண்டும் என பொலீஸ் மா அதிபர் ராஜகுரு தெரிவித்ததாக 'லங்காதீப' தெரிவிக்கிறது.

சேவையின் அவசியம் கருதி இந்த ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளில் இதுவரை பங்குபற்றாத சகல பொலீஸ் உயரதிகாரிகளையும் இப்பணியில் கட்டாயமாக ஈடுபடுத்துவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக பொலீஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார். [இ-10]

## இடம்பெயர்ந்த மேலும் சில ஆசிரியருக்கு கிளிநொச்சியில் நியமனம்

கிளிநொச்சி, ஜன. 23

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் தங்கியுள்ள ஆசிரியர்களில் மேலும் சிலருக்கு இங்கு தற்காலிக நியமனம் வழங்குவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையில் தற்பொழுது தங்கி இருக்கும் இடம்பெயர்ந்த மக்கள் வேறு இடங்களுக்குச் சென்றதும், மாணவர்களின் வரவுக்கு ஏற்ப ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரியவந்தது.

இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் 571 பேர் கிளிநொச்சி மாவட்டத்தில் தற்காலிக நியமனம் பெற்று ஏற்கனவே கடமையை ஏற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### வைத்திய சேவை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கரவெட்டிப் பிரிவு அலுவலகத்தில் இம் மாதம் 25ஆம் திகதி நடமாடும் வைத்திய சேவை இடம்பெறும்.

நெல்லியடியிலுள்ள இந்த அலுவலகத்தில் வைத்து இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் நடமாடும் வைத்திய சேவைப் பிரிவினால் இந்த வைத்திய சேவை நடத்தப்படும்.

# சந்திரிகா மற்றும் அரசு பிரமுகர்களின் பாதுகாப்புக்கு புதிய உத்தி ஆராய்வு

கொழும்பு, ஜன. 23

ஜனாதிபதி சந்திரிகா உட்பட அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர்கள் தங்கும் இடங்களைச் சுற்றி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதை விட, அத்தகைய முக்கியமானோர் தங்கும் இடங்கள் மற்றும் அவர்களின் நடமாட்டம் பற்றிய விவரங்களை இரகசியமாகப் பாதுகாப்பதே புத்திசாலித்தனமானதாகும்

இவ்வாறான கருத்து அரச பிரமுகர்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பானபாதுகாப்பு உயர் வட்டாரங்களில் நிலவுவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பல அரசுப் பிரமுகர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தீவிரப்படுத்தும் நோக்கத்துடன் அவர்களின் வாசஸ்தலங்கள், அவர்கள் நடமாடும் இடங்கள் போன்றவற்றில் அளவுக்கு அதிகமாக பாதுகாப்பு கெடுபிடிகளைச் செய்வதால் பொதுமக்களுக்கு அசௌகரியமும், எரிச்சலும் ஏற்படுகின்றன. இதனால் அரசுப் பிரமுகர்களுக்கு எதிரான கருத்து பொதுமக்கள் மத்தியில் பரவவும் வாய்ப்புகள் உள்ளன.

இத்தகைய கெடுபிடிப் பாதுகாப்பு ஏற்பாடுகள், சம்பந்தப்பட்ட அரசுப் பிரமுகருக்கும் எரிச்சலை ஏற்படுத்துவதாகவும் உள்ளன.

எனவே —

அதற்குப் பதிலாக —

முக்கிய பிரமுகர்களின் தங்கும் இடங்கள், நடமாட்டங்கள், பங்குபற்றும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றை இரகசியமாகப் பேணுவதன் மூலம் அவர்களுக்கு வழங்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள், கெடுபிடிகள் போன்றவற்றைக் குறைக்க முடியுமா என பாதுகாப்பு உயர் வட்டாரங்கள் ஆராய்ந்து வருகின்றனவாம்.

விமானங்கள் மூலம் புலிகள் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தலாம் என்று அஞ்சப்படுவதால், அத்தகைய தாக்குதல்களைத் தவிர்ப்பதற்கும் — விமான எதிர்ப்பு ஆயுதங்களைப் பெரும் எண்ணிக்கையில், பெரும் பொருள் செலவில் வாங்கிப்பொருத்துவதிலும் பார்க்க — இத்தகைய இரகசியம் பேணும் ஏற்பாடே பொருத்தமான உத்தியாக இருக்கும் என்றும்—

பாதுகாப்பு வட்டாரங்களில் கூறப்படுகின்றதாம்.

லிபிய ஜனாதிபதி கேணல் கடாபி, ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் போன்றோர் விமானத் தாக்குதல் அபாயங்களுக்கு பலமுறை உள்ளானவர்கள்.

அவர்களும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் போன்றோரும் —

விமான எதிர்ப்பு ஆயுதங்களை விட, அடிக்கடி தங்குமிடங்களை மாற்றிக் கொள்ளுதல், தங்குமிடம் பற்றிய விவரத்தை இரகசியமாகப் பேணுதல் போன்ற ஏற்பாடுகளைப் பின்பற்றியே தமது தற்பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாம். (உ)

## கிளிநொச்சி முகாம்களில் சமைத்த உணவுக்கு பதிலாக உலர் உணவு

கிளிநொச்சி, ஜன. 23

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கு — சமைத்த உணவுக்குப் பதிலாக — உலர்உணவை வழங்குவதற்கு முடிவாகியுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தில்லை நடராஜா செய்துள்ளார்.

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கி இருக்கும் மக்களுக்கு சமைத்த உணவை வழங்குவதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தொடர்ந்து அனுமதி மறுத்து வருவதை அடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள சுமார் 5 ஆயிரம் குடும்பங்களுக்கும் கிரமமாக உலர் உணவு வழங்குவதற்குரிய சகல ஏற்பாடுகளையும் அரசாங்க அதிபர் திரு. தில்லை நடராஜா செய்துள்ளார்.

(இ-றி)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

23 — 01 — 1996

இரவு

- ★ 8-02 — புரட்சிப்பூக்கள்
- ★ 8-20 - கருத்துக்களம் — இ. இராஜேஸ்வரன் எழுதிய ''உறுதி''
- ★ 8. 30 — செய்திகள்.
- ★ 8. 40 — அறிவிப்புகள் — தொடர்ந்து 9.00 மணி வரை தாயகப்பாடல்கள்

24 — 01 — 1996

காலை

- ★ 7. 02 —மாவீரர்வணக்கம்
- ★ 7-10— களத்தில் மலர்ந்தவை
- ★ 7. 30 — செய்திகள்
- ★ 7. 35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7. 45 அறிவிப்புக்கள்— தொடர்ந்து 8-00 மணி வரை தாயகப்பாடல்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடும்ப அட்டை இல்லாதோரும் பங்கீட்டு அட்டை மீளாய்வு செய்யலாம்

சாவகச்சேரி, ஜன. 23

பங்கீட்டு அட்டைகளை மீளாய்வு செய்வதற்கு தேவையான குடும்ப அட்டை இல்லாத இடம்பெயர்ந்தவர்கள் தமது பங்கீட்டு அட்டைகளை மீளாய்வு செய்ய விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தென்மராட்சியில் உள்ள குடும்ப அட்டை இல்லாத இடம்பெயர்ந்தவர்கள் தற்போதைய நிரந்தர கிராம சேவையாளரிடம் உறுதிக்கடிதத்தைப் பெற்று வலய அலுவலகங்களில் தங்கியுள்ள விசேட அலுவலரிடம் அதை சமர்ப்பித்து பங்கீட்டு அட்டையை உடனடியாக மீளாய்வு செய்யலாம் என்றும்—

வடமராட்சியில் உள்ள குடும்ப அட்டை இல்லாத இடம்பெயர்ந்தவர்கள் நிரந்தர கிராம சேவையாளரிடம் உறுதிக் கடிதத்தைப் பெற்று பிரதேச செயலர் செயலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் —

இவ்வாறு கையளிக்கும் கடிதங்கள் தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் பருத்தித்துறையில் நடைபெறும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

பத்திரிகை விநியோகம் செய்வதற்கு

## ஆள் தேவை

வடமராட்சிப் பகுதியில் பத்திரிகைகளை எடுத்துச் சென்று விநியோகிக்க ஆள் தேவை, உடன் நேரில் வரவும்.

நேரம் காலை 8.00 — 12.00

உதயன் பணிமனை,
சரசாலை, சாவகச்சேரி.

எழுதுநர் பதவிக்கு ஆள் சேர்ப்பு

# செயலகத்தில் சமுகமளிக்க அரச அதிபர் கோரிக்கை

அரசாங்க எழுதுனர் பதவிகள், அதையொத்த சேவைகளில் உள்ள பதவிகள் மற்றும் அரசகூட்டுத்தாபன எழுதுனர் பதவிகள் ஆகியவற்றுக்கு 94/95 ஆம் ஆண்டுக்கான ஆள் சேர்ப்பு போட்டிப் பரிட்சையில் பெறுபேறு வெளியாகியவர்களை யாழ். செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

விருப்பத்துக்குரிய பதவியை தெரிவு செய்வதற்கான படிவங்களை பூர்த்தி செய்யவே செயலகத்தில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. [இ-3]

## பாலத்தின் கீழ் பெண்ணின் சடலம்

சாவகச்சேரி, ஜன. 22

கைதடிப் பாலத்தின் கீழ் நேற்று அனாதரவான நிலையில் கிடந்த வயோதிபப் பெண் ஒருவரின் சடலம் கைதடி காவல்துறையினரால் சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இறந்தவர் 72 வயதுடைய சின்னப்பொடி முத்தி என்றும் —

சுழிபுரத்தில் இருந்து இடம்பெயர்ந்து கைதடிப் பிள்ளையார் கோவில் பகுதியில் தங்கி இருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-13)

# போரை நிறுத்திப் பேசுவதற்கு ஏற்கக் கூடிய யோசனை தேவை

## கரிகாலன் அளித்த பேட்டி விவரம்

கொழும்பு, ஜன. 23

தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வு யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டால் மட்டுமே —

போரை நிறுத்தி அரசியல் பேச்சுவார்த்தை நடத்த இயலும்.

— இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. சிவஞானம் கரிகாலன்ரோய்ட்டருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள பாடசாலை ஒன்றின் வளவில் வைத்து திரு. கரிகாலன் இந்தப் பேட்டியை வழங்கியதாகத் தெவிக்கப்பட்டது.

திரு. கரிகாலன் தமது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

இப்போது நடைபெற்று வரும் யுத்தத்துக்கு முடிவு கட்டி, சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் உண்மையாகவே விரும்புமானால் நேரடியாகவோ அல்லது மத்தியஸ்தர்கள் மூலமாகவோ பேச்சுவார்த்தைக்கான அழைப்பை விடுக்கலாம்.

கடைசியாக நடந்த சமரச பேச்சுக்கு அவதானிகளை அனுப்பிய கனடா, நோர்வே அல்லது நெதர்லாந்து ஆகிய நாடுகளை இதற்குப்பயன்படுத்தலாம்.

நாங்கள் இப்போது அரசியல்வாதிகளாக இல்லை. நாங்கள் வடக்கு — கிழக்கு ஈழத் தாயகத்தை வென்றெடுப்பதற்காக போராடும் விடுதலைப் போராளிகள்.

அரசாங்கம் நல்ல தீர்வு யோசனைகளுடன் முன்வருமேயானால் நாங்களும் அரசியல்வாதிகளாக மாறிக் கொள்வோம். — என்று அவர் தெரிவித்தார். (இ-3-6)

---

தபால்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பப்பட உள்ளன.

எனவே மேற்படி தபாலகங்களின் தபால் விநியோகம் சிறிது தாமதமாகும் என்று தெரிவிக்கப்பட்டது. [இ-3-7]

---

சிங்கள...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளப் குடியேற்றப் பகுதிகளிலிருந்தும் அதிகமானோர் வெளியேறியுள்ளனர்.

சிங்கபுர, வெலிக்கந்த, கெமுனுபுர ஆகிய குடியேற்றங்களில் வாழ்ந்த ஆயிரம் சிங்களக் குடும்பங்கள் தமது குடியிருப்புக்களை விட்டு வெளியேறி விட்டனர் எனவும் செய்திகள் கூறுகின்றன.

இதேவேளை திருகோணமலையிலும் சிங்களக் குடியேற்ற வாசிகள் இடம் பெயர்ந்துள்ளனர். இரண்டாயிரம் சிங்களக் குடும்பங்கள் கல்லறாவ, கும்புறுப்பிட்டிப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்துள்ளனர். (இ-7)

---

சிப்பாய்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொமாண்டோ கிளைமோர் - 1, கிளைமோர் வயர்றோல் - 1, கிளைமோர் வெடிக்க வைக்கும் கருவி - 1, கைக்குண்டுகள் - 5, நடுத்தர ரவைகள் - 335, நேட்டோ ரவைகள் - 119, கான்பரா லைட்டுகள் - 2 என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இந்த வெற்றிகரத் தாக்குதலில் கப்டன் அன்புக்கினியன் (சின்னராசா ராஜ்மனோகரன் — திருகோணமலை) வீரமரணமடைந்தார்.

அதே சமயம் இத் தாக்குதலின்போது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் பெண்களிலும் இருவர் உயிரிழந்தனர் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (இ-3)

---

39 படையினருடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மல் போயிருப்பது ஒரே தாக்குதலில் அது வீழ்த்தப்பட்டு விட்டது என்பதையே காட்டுவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

எந்தவித அபாய அறிவிப்புக் குறித்தோ அல்லது தொழில் நுட்பக் கோளாறுகள் குறித்தோ விமானி அறிவிக்கவில்லை. இது விமானி நிலைமையைப் புரிந்து கொள்வதற்கு முன்னரே ஹெலிக்கொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டுவிட்டது என்பதை உணர்த்துவதாக உள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

சம்பந்தப்பட்ட கடல் பிரதேசத்தில் விமானப் படையினரும், கடற்படையினரும் நேற்று மாலை தேடுதலை ஆரம்பித்துள்ள போதிலும்—

நேற்று நள்ளிரவு வரை ஹெலிக்கொப்டர் பற்றிய தகவல்கள் ஏதும் அவர்களுக்குக் கிடைத்ததாக செய்திகள் எவையும் வெளியாகவில்லை.

காணாமல்போன ஹெலிக்கொப்டரில் பயணம் செய்தோர் பாதுகாப்பு அங்கிகளைக் கொண்டு சென்றிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவை தூரத்தில் இருந்து பார்க்கும்போது ஒளிரும் தன்மை உடையவை. ஆகவே ஹெலிக்கொப்டர் வீழ்ந்ததும் அதிலிருந்தோர் ஹெலிக்கொப்டரிலிருந்து வெளியேறியிருப்பின், அவர்களைத் தேடிச்சென்ற கலங்கள் அவர்களை இலகுவாக அடையாளம் கண்டிருக்க முடியும் என மற்றொரு செய்தி தெரிவித்தது.

ஆனால் ஹெலி எங்கு வீழ்ந்தது என்பது திட்டவட்டமாகத் தெரியாததால் ஹெலியில் பயணம் செய்தவர்களையோ அல்லது அவர்களது சடலங்களையோ கண்டுபிடிப்பது கஷ்டமானதாக இருக்கக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கனரக ஆயுதங்கள் பொருத்தப்பட்ட இந்த ஹெலிக்கொப்டர் கடந்த வருடம் ரஷ்யாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டது.

படையினருக்கு முக்கிய விநியோகங்களை மேற்கொள்ளவும் இந்த ரக ஹெலிகளே பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(உ-3-6-7-15-80-118-173)

## இரணைமடு குளத்தில் மூழ்கி மரணம்

கிளிநொச்சி, ஜன. 23

இரணைமடுக் குளத்தில் தனது நண்பர்களுடன் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் குளத்தில் மூழ்கி மரணமானார்.

கடந்த 21 ஆம் திகதி நடந்த இச்சம்பவத்தில் யூட் கமலநாதன் (19 வயது) என்ற இளைஞனே மரணமானவராவார்.

இளவாலை பெரிய விளானைச் சேர்ந்த இவர் புனித கென்றியரசர் கல்லூரி மாணவ்னர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## தொழிலாளி காயம்

மந்திகை, ஜன. 22

கப்பலில் இருந்து இறக்கிக் கொண்டிருந்த மா மூடைகள் பொறிந்து கொட்டிண்ட வேலை அந்த மா மூட்டைகளுக்குள்சிக்கிக்குண்டு தொழிலாளி ஒருவர் படுகாயமடைந்தார்.

பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்று இடம் பெற்ற இச்சம்பவத்தில் துறைமுகத் தொழிலாளியான கற்கோட்டையைச் சேர்ந்த மரியதாஸ் ஜெயக்குமார் (வயது18) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

# மரண அறிவித்தல்கள்

## கதிரன் கந்தையா

அச்செழுவைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரபல வர்த்தகரும், சமூக சேவையாளருமாகிய கதிரன்—கந்தையா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், அற்புதலிங்கத்தின் (முன்னாள் ஊழியர் யூனியன் கல்லூரி தெல்லிப்பளை) மாமனாரும், தேவமலரின் சிறியதகப்பனாரும், நாகமுத்துவின் அன்புத் தம்பியும், மஞ்சுளா (ஜேர்மனி), ஷமிலா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று செவ்வாய்க்கிழமை சரசாலை தெற்கிலுள்ள கைம்பெண் சிவக்கொழுந்துவின் இல்லத்திலிருந்து மாலை 3 மணிக்கு எடுத்துச் சென்று வேம்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
ஆ. சி. அற்புதலிங்கம்
(மருமகன்)

(40229)

## யூட் கமலநாதன் (கமலன்)

பெரியவிளான் - இளவாலையை பிறப்பிடமாகவும், தற்போது மீசாலையில் வசித்தவரும், புனித கென்றியரசர் கல்லூரி மாணவனும், சிறந்த உதைபந்தாட்ட வீரனுமாகிய யூட் கமலநாதன் 21-01-1996 இல் அகாலமரணமானார். இவர் ஜேம்ஸ் ஸ்ரனிஸ்லோஸ், பவளின்மரியநாயகி ஆகியோரின் அன்புமகனும் றதிக்கா, றமேஷ் (ஜேர்மனி), சுதர்சன் (மாணவன், கென்றியரசர்கல்லூரி) ஆகியோரின் சகோதரனும், செட்டி, பொன்னுத்துரை ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று பி. ப. 3-00 மணியளவில் மீசாலை அல்லாரை வீதியில் உள்ள இவரது தற்போதைய இல்லத்திலிருந்து மிருசுவில் புனித நீக்கிலார் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
திருமதி பவளின்மரியநாயகி
(தாய்)

(40229)

## நாகமுத்து சிதம்பரப்பிள்ளை

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை விசிப்பிடமாகவும், தற்போது மட்டுவில் வடக்கு சரசாலையை தற்காலிக வப்பிடமாகவும் கொண்ட நா. சிதம்பரப்பிள்ளை அவர்கள் 22-1-96 திங்கள் மாலை காலமானார்.

இவர் ரூபதியின் அன்புக் கணவரும், தில்லைத்தேவன் (டென்மார்க்). தில்லையபம்லம், தில்லைநாதன் (உதயன்), தில்லைமணி (யாழ். மாநகர சபை, மின்சாரப் பகுதி), தில்லைத்தேவி, தில்லைநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும், நகுலவதி, கமலாதேவி, இராமலிங்கம், கணபதிப்பிள்ளை (சங்கானை ப.நோ.கூ. ச.), மனோகரி, சண்முகவடிவு (ஆசிரியை, வீமன்காமம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவகௌரி, சிவப்பிரியா, சிவரஞ்சன், சுகதாரணி, கென்றிக்ராஜ், டிலெக்சன், குகதயாளினி, ராகவேந்திரன், பிரசாந்தன், கோகுலதாசன், சத்தியராம், நர்த்தனா ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23-1-96) நண்பகல் 1 மணியளவில் வேம்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
தில்லைமணி
(மகன்)

மருதடிப்பிள்ளையார் கோவிலடி,
கருணன் வீதி,
மட்டுவில் வடக்கு, சரசாலை.

(40230)

2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்கள்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 23-01-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org